(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(8).]

# பாராளுமன்றத்தின் 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2025 ஆகஸ்ட் 07, வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2025 ஆகஸ்ட் 19, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பில் 2025.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2025 ஏப்ரல் 28 ஆம் திகதிய 2434/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— திருத்தப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தித் தீர்வை தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஏப்ரல் 28 ஆம் திகதிய 2434/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஏப்ரல் 28 ஆம் திகதிய 2434/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவுடன் மற்றும் 35(1), (2) மற்றும் (4) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 58 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2430/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

# 2025 ஆகஸ்ட் 21, வியாழக்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

# 2025 செப்தெம்பர் 09, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1105/2025

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய அரசாங்கம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கென (RDA) 39 நிரந்தர பணிப்பாளர்களை நியமிப்பதற்கு கட்டங்கட்டமாக நேர்முகப் பரீட்சைகளை நடத்தியுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நேர்முகப் பரீட்சைகளின் வாயிலாக, 05 மாகாண பணிப்பாளர்களையும் 34 பணிப்பாளர்களையும் தெரிவுசெய்து, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அதிகாரசபையின் தலைவர் ஆற்றுப்படுத்தியுள்ளார் என்பதையும்;

(iii) சுமார் ஆறு மாதங்கள் கடந்திருப்பினும், இதுவரை அந்த நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்;

(iv) மேற்படி அதிகாரசபையில் பல வருடங்களாக பணியாற்றுகின்ற ஊழியர்கள் ஓய்வுபெறவிருக்கும் காலம் அண்மித்துள்ள நிலையில் பதவி உயர்வை எதிர்ப்பார்ப்பதுடன் அத்தகைய எதிர்பார்ப்பு நியாயமானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இதுவரை மேற்படி நியமனங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நியமனங்களை வழங்குவதில் தடைகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) அத்தடைகள் யாவை என்பதையும்;

(iv) அத்தடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி நியமனங்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் அரசாங்கத்தின் வினைத்திறனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதை அறிவரா என்பதையும்;

(vi) மேற்படி நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1112/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின் அரசாங்க பாடசாலைகளில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றமையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாகவும் பாடங்கள் வாரியாகவும் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1118/2025

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முனைப்பான சேவையில் ஈடுபட வேண்டியுள்ளபோதிலும், அங்கவீனமடைதல் காரணமாக முனைப்பான சேவையில் ஈடுபடாதுள்ள இராணுவ அங்கத்தவர் களுக்கு, அவர்களது அங்கவீனநிலையைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும் சலுகைகள்/ கொடுப்பனவுகள் யாவை;

(ii) குறிப்பிட்ட அங்கவீனமுற்ற இராணுவ அங்கத்தவர்களை மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வு பெறச் செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் மரணமடைந்தால் அவர்களில் தங்கி வாழ்வோருக்கு வழங்கப்படும் சலுகைகள் / கொடுப்பனவுகள் யாவை;

(iii) மேற்படி சலுகைகள் / கொடுப்பனவுகள் போதுமானதா;

(iv) இன்றேல், மேற்படி சலுகைகள் / கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முனைப்பான சேவையில் ஈடுபட்டிருக்கும் அங்கவீனமுற்ற இராணுவ அங்கத்தவர்களை ஓய்வு பெறச் செய்வதற்கு முன்னர் அவர்கள் மரணிக்கும் பட்சத்தில், அவர்களில் தங்கி வாழ்வோருக்கு வழங்கப்படும் சலுகைகள்/ கொடுப்பனவுகள் யாவை;

(ii) அங்கவீனமடைதல் காரணமாக சேவைக்கு சமூகமளிக்காதிருந்த, பின்னர் சேவை அத்தியாவசியமில்லை எனும் அடிப்படையில் சேவையிலிருந்து அகற்றப்பட்டுள்ள இராணுவ அங்கத்தவர்களுக்கு அவர்களது அங்கவீன நிலையைக் கருத்தில் கொண்டு ஏதேனும் சலுகைகள்/ கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்படுகின்றனவா;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) அவர்களுக்கு சலுகையை/ கொடுப்பனவை வழங்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(v) ஆமெனில், அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா;

(vi) மேற்படி நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1158/2025

கௌரவ கிட்ணன் செல்வராஜ்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள எல்ல பிரதேச சபைக்குட்பட்ட கலுகல்ல தோட்டத்தின் மொத்தக் காணியில் ஒரு தேயிலைத் தோட்டமும் அதி சொகுசு பங்களாவும் அமைந்துள்ள 53 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட ஒரு காணிப்பகுதியின் உரிமையாளர் இந்தியாவில் உள்ளார் என்பதையும்;

(ii) அந்தக் காணிக்கு போலி உரிமையாளர் ஒருவர் முன்வந்திருக்கின்றார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணியினுள் அத்துமீறி நுழைந்து தேயிலைக் கொழுந்து பறிப்பது சட்டவிரோதமானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி காணியின் உரித்து நிர்ணயிக்கப்படாமையால், மேற்படி காணியை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1175/2025

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவில், முறையே 1997, 1999, 2002 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட புனஸ்தாபன, திகாமடுலு ஜன உதான, நாமல் உயன மற்றும் திகாயுகம மற்றும் லோக ஜனாவாச தயாபுர ஆகிய வீடமைப்புத் திட்டங்களின் காணிகளை கையகப்படுத்தி உரிய பயனாளிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா;

(ii) அவற்றுள் புனஸ்தாபன, திகாமடுலு ஜன உதான மற்றும் லோக ஜனாவாச ஆகிய வீடமைப்புத் திட்டங்களுக்காக காணி பெறுனர்கள் பணம் சேகரித்து, அளவிட்டு, சம்பந்தப்பட்ட அறிக்கைகளை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்துள்ள போதிலும், இதுவரை காணி கையகப்படுத்தலுடன் தொடர்புடைய கோரிக்கைகள் அமைச்சு ஊடாக அம்பாறை பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படாததற்கான காரணங்கள் யாவை;

(iii) அக்காணிகளை கையகப்படுத்துவதற்கான கோரிக்கையை அமைச்சின் செயலாளர் ஊடாக அம்பாறை பிரதேசச் செயலாளருக்கு அனுப்புவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புத் திட்டங்களுக்கு மேலதிகமாக அம்பாறை மாவட்டத்தில் இதுவரை பயனாளிகளுக்கு உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படாத வீடமைப்புத் திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) மேற்படி உறுதிப்பத்திரங்களை வழங்குவதில் தாமதம் நிலவுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1178/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி மாவட்டத்தில் —

(i) நிரந்தரமாக குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) குடியிருக்கும் அறுதி உறுதிக் காணிப்பத்திர உரித்துடைய குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) குடியிருக்கும் காணி அனுமதிப்பத்திர உரித்துடைய குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) குடியிருக்கும் எனினும் அறுதி உறுதிக் காணிப்பத்திர உரித்தோ அல்லது அனுமதிப்பத்திரமோ இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் நபர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனுமதிப்பத்திரத்துடனான வயற்காணிகள் மற்றும் மேட்டுக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வருடங்களுக்கு மேலாக குடியிருக்கும் நபர்களுக்கு இதுவரையில் அறுதி உறுதிக் காணியுரித்து வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) அறுதி உறுதிக் காணியுரித்து இன்றி வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கடன் மற்றும் அடகுச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்காத காரணத்தினால் அவர்களால் தங்களது பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியாதுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1234/2025

கௌரவ அரவிந்த செனரத்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) சட்டரீதியாக ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ள நிறுவனங்கள் மாத்திரம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்குகின்றனவா என்பதையும்;

(iii) சட்டரீதியாக ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளாத நிறுவனங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்குவதாயின், அந்த நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்கும்போது, சட்டரீதியற்ற முறையில் வேலைவாய்ப்பு வழங்கும் அந்த நிறுவனங்கள் நிதி மோசடியில் ஈடுபடுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அந்த நிறுவனங்களால் மோசடி செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) பணத்தை அறவிட்டுள்ளபோதிலும் வேலைவாய்ப்புகளை வழங்காதுள்ள நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1236/2025

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் தொடக்கம் சிலாவத்துறை வரையான உள்ளக வீதி, 2010 ஆம் ஆண்டில் அப்போதைய மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சினால் புனரமைக்கப்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வீதியின் தூரம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வீதி எந்தக் கிராமத்தினூடாகப் பயணிக்கின்றதென்பதையும்;

(iv) மேற்படி வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் நிறைவு செய்யப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை புனரமைக்கும் பணிகளுக்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட கம்பனியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரதியொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) உடன்படிக்கை எட்டப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த கம்பனியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி வீதியை புனரமைப்பதற்காக கம்பனிக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வீதி புனரமைக்கப்படவில்லை என்பதையும் அதற்காக மோசடியான முறையில் பணம் பெறப்பட்டுள்ளதையும் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1241/2025

கௌரவ திலிண சமரகோன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் காணிகள், வருடாந்த அல்லது நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இப்பலோகம மற்றும் கெக்கிராவை பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள காணிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அவை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி காணிகளின் அளவு மற்றும் அவை வழங்கப்பட்டுள்ள காலப் பகுதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இல 519-இஹலகாகம, இல 621 - இஹலகம மற்றும் இல 618-கரம்பவத்தை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக குத்தகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், சம்பந்தப்பட்ட தரப்புகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு காணியின் அளவு மற்றும் குத்தகை காலப்பகுதி வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) அக்காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீளச் சுவீகரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) மேற்படி காணிகள் துணைக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(viii) அக் காணிகளைச் சுற்றி யானைத் தடுப்பு வேலிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(ix) அதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1250/2025

கௌரவ நந்த பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதும் கோகாலை மாவட்டத்தில் காணப்படுகின்றதுமான காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(ii) அத்தகைய காணிகளில், தற்போது கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) அவ்வாறு ஒவ்வொரு காணியும் வழங்கப்பட்டுள்ள நபரின் பெயர் மற்றும் வழங்கப்பட்டுள்ள ஆண்டு வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளில், இதுவரை எந்தவோர் அபிவிருத்தி நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாதுள்ள காணியின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(v) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அவ்வாறு மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 செப்தெம்பர் 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

15/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்திக்கு வழங்கியுள்ள பங்களிப்பு, சதவீத அடிப்படையில் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) தற்போதுள்ள சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தொடர்பில் செயற்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனம் ஒவ்வொன்றும் மேற்கொள்ளும் பணிப்பொறுப்புக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

117/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iii) ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளாத உறுப்பினர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1253/2025

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமானதும் நுவரெலியா மாவட்டத்தில் காணப்படுகின்றதுமான காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(ii) அத்தகைய காணிகளுக்கென தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள மாற்றுக் காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயர் என்பதையும்;

(iii) அவ்வாறு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரின் பெயர், வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு, காணி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படை மற்றும் வழங்கப்பட்ட காலப் பகுதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அவ்வாறு மாற்றுக் காணிகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் பட்டியலில் அரசியல்வாதிகளின் பெயர்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அந்த அரசியல்வாதிகள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1254/2025

கௌரவ ஈ.எம்.பஸ்நாயக,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச் சீர்திருத்த ஆணைக்குழு உருவாக்கப்பட்டபோது, அந்த ஆணைக்குழுவிற்கு கண்டி மாவட்டத்திலிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் சட்டரீதியாக குத்தகை அடிப்படையில் காணிகள் வழங்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளின் அளவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து உரிய முறையில் வரி அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டவாறு குறித்த காணிகளில் சட்டரீதியற்ற வகையில் காணியை உபயோகப்படுத்துகின்ற நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) இந்நபர்களுக்கு/நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பின், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1255/2025

கௌரவ லசித் பாஷண கமகே,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களில் இதுவரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் பெயர், அமுல்படுத்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவு, ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, நிறைவு செய்யப்பட்ட ஆண்டு, செலவிடப்பட்ட தொகை மற்றும் தற்போதைய நிலைமை வெவ்வேறாக யாது;

(iii) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களில் இதுவரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாதுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் பெயர், செலவிடப்பட்ட தொகை மற்றும் தற்போதைய நிலைமை வெவ்வேறாக யாது;

(v) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் எதிர்காலத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 செப்தெம்பர் 11, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

196/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் வலுசக்தி துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்திய முதலீட்டுக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை, மேற்படி ஒவ்வொரு முதலீட்டுக் கருத்திட்டத்தின் பெயர், முதலீட்டின் பெறுமதி மற்றும் அதன் மூலம் இலங்கையின் வலுசக்தி துறைக்கு கிடைக்கும் பங்களிப்பு ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) இலங்கையின் வலுசக்தி துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்திய முதலீடுகள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

219/2024

கௌரவ ரோஹன பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கையில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட வயல்களின் அளவு ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஏற்ப வெவ்வேறாக எத்தனை ஏக்கர் என்பதையும்;

(ii) அதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நெல் விளைச்சலில் ஏற்படும் வீழ்ச்சி யாது என்பதையும்;

(iii) பாதிக்கப்பட்ட வயல்களில் மீள்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களின் அளவு எத்தனை ஏக்கர் என்பதையும்;

(iv) பாதிக்கப்பட்ட வயல்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது குறித்த விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

226/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தவறான முறையில் ஈட்டிக்கொண்ட சொத்துக்களை மீள அறவிட்டுக் கொள்வது தொடர்பில் போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (UNODC) மற்றும் ஸ்டார் நிறுவனம் (StAR Initiative) ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு 'வளமான நாடு - அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தினூடாக உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களூடாக பெறப்படும் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைச் சேவைகளின் முன்னேற்றம் ஒவ்வொரு நிறுவன ரீதியாக யாது என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களூடாக தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைச் சேவைகளைப் பெறுவதில் முன்னேற்றம் காணப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

263/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத் தகவல் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அத்திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் அத்திணைக்களத்தில் கடமையாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படித் திணைக்களத்தின் தற்போதைய பணிப்பொறுப்பு யாது என்பதையும்;

(v) மேற்படித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயர் என்ன என்பதையும்;

(vi) அவருடைய கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

313/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் 2015 முதல் இற்றைவரை இயங்கிவரும் தனியார் மின்சார உற்பத்திக் கம்பனிகளின் எண்ணிக்கையினை ஒவ்வொரு வருடத்திற்குமென வெவ்வேறாகவும்;

(ii) அவ் ஒவ்வொரு கம்பனியினதும் பெயர் மற்றும் முகவரியை அதனால் உற்பத்தி செய்யப்படும் கொள்ளளவுடன் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பனியும் 2015 முதல் இற்றைவரை இலங்கை மின்சார சபைக்கு வழங்கிய மின்சார அலகுகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு கம்பனிக்கும் செலுத்தப்பட்ட தொகை என்பவற்றை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மின்சார உற்பத்திக் கொள்ளளவை அதிகரிப்பதற்காக இலங்கை மின்சார சபையினால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இந்த மின்சார உற்பத்தி முறைமைகள் புதுப்பிக்கத்தக்கனவா அல்லது அனல் மின்சாரத்திற்குரியனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

340/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெரிய போரதீவு மற்றும் பழுகாமம் ஆகிய பிரதேசங்களை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பாலம் புனரமைக்கப்பட வேண்டுமென்பதையும்;

(ii) குறித்த பாலத்தின் ஊடான போக்குவரத்து வசதிகளை மேற்கொள்வது பொது மக்களுக்கு பெரும் நெருக்கடியாக உள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி பாலத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

597/2025

கௌரவ எஸ்.எம் மரிக்கார்,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அவசரக் கடவுச்சீட்டு (EC passport) வழங்கும் பணிகளை 2024.12.24 ஆம் திகதிக்கு பின்னர் நிறுத்தியுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் யாவை என்பதையும்;

(iii) இந்தியா மற்றும் நேபாளத்திற்கு யாத்திரிகைப் பயணங்களை மேற்கொள்ளும் யாத்திரிகர்களுக்கும் பல்வேறு நோய்களுக்காக சிகிச்சை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இந்தியாவிற்கு செல்லும் நோயாளர்களுக்கும் அது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாற்றுவழி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

622/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள அனர்த்தங்களின் எண்ணிக்கை, அந்தச் சம்பவங்களால் அனர்த்தங்களுள்ளான ஆட்களின் எண்ணிக்கை மற்றும் குறித்த ஆட்களுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அனர்த்த முகாமைத்துவத்திற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) உலகில் பெரும்பாலான நாடுகள் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதை அறிவாரா என்பதையும்;

(iv) அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

726/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டிற்கு ஒரு வருடத்திற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற உருளைக்கிழங்கின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) இறக்குமதி செய்யப்படுகின்ற உருளைக்கிழங்கிற்கு அறவிடப்படுகின்ற வரி எவ்வளவு என்பதையும்;

(iii) இந்நாட்களில் நுவரெலியா, வெலிமடை, ஊவ பரணகம மற்றும் ஹப்புதலை ஆகிய பிரதேசங்களில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) எனவே இலங்கையில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படுகின்ற காலப்பகுதியில் இலங்கைக்கான உருளைக்கிழங்கு இறக்குமதியை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1122/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை முப்படையில் பணியாற்றும் சிவில் ஆண் மற்றும் பெண் ஊழியர்களின் எண்ணிக்கை இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை என்பவற்றிற்கமைவாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) அவர்கள் ஈடுபட்டுள்ள தொழில்கள் யாவை என்பதையும்;

(iii) அவர்களில் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள சிவில் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) தற்காலிக அடிப்படையில் தற்பொழுது பணியாற்றும் சிவில் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) தற்காலிக அடிப்படையில் பணியாற்றிய சிவில் ஊழியர்களை இறுதியாக நிரந்தரமாக்கிய வருடம் யாதென்பதையும்;

(vi) தற்காலிக அடிப்படையில் தற்பொழுது பணியாற்றும் சிவில் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(viii) தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் சிவில் ஊழியர்களை நிரந்தரமாக்குதல் தொடர்பிலான நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்பொழுது முப்படைகளில் சிவில் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2025 செப்தெம்பர் 12, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

638/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் மீனவர்களிடமிருந்து கொள்வனவு செய்த மீன்களின் அளவு ஒவ்வொரு வருடத்திற்கமைவாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) அந்த மீன்களின் அளவானது, இலங்கையின் மொத்த மீன் அறுவடையின் சதவீதமாக ஒவ்வொரு வருடத்திற்கமைவாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மீன்களை கொள்வனவு செய்வதற்கும், மீன்களின் விலையை நிலையான மட்டத்தில் பேணுவதற்கும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் இடையீடு எவ்வகையிலும் போதுமானதாக இல்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அந்த நிலைமையை சரிசெய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

736/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) E-வீசா முறை தொடர்பான மோசடிகளை கண்டறிவதற்காக தடயவியல் கணக்காய்வை மேற்கொள்வதற்கு இணங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி தடயவியல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதனூடாக கண்டறியப்பட்ட விடயங்கள் யாவை என்பதையும்;

(iii) இம்மோசடிகள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

809/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இந்த அதிகாரசபைக்கென செலவிடப்பட்டுள்ள தொகை ஒவ்வோர் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி அதிகாரசபையின் பணிகளை மேலும் வலுவூட்ட எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

833/2025

கௌரவ சட்டத்தரணி (திருமதி) சமிந்திராணி கிரிஎல்லே,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் தொடர்பில் மத்திய அரசின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் மாகாண சபைகள் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) கூட்டுறவுக் கிராமிய வங்கிகளைக் கணக்காய்வு செய்யும் பணிகள் மேற்படி திணைக்களங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மத்திய அரசின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் மாகாண சபைகள் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களங்களாலும் கணக்காய்வு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) கூட்டுறவுக் கிராமிய வங்கிகளை முறையாக கணக்காய்வுக்கு உட்படுத்தாததன் காரணமாக அந்த வங்கிகளின் பணிப்பாளர் சபையினால் பாரியளவிலான நிதி மோசடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நிலைமையினைத் தடுப்பதற்காக கூட்டுறவுக் கிராமிய வங்கிகளை முறையான வகையில் வருடாந்தம் கணக்காய்விற்கு உட்படுத்துவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

860/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிறுவப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றில் இயங்குநிலையிலுள்ள மற்றும் இயங்காத நிலையிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மதவாச்சியில் பொருளாதார மத்திய நிலையமொன்று உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி பொருளாதார மத்திய நிலையம் திறக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(v) அதனை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) அங்கு காணப்படும் விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(vii) அவற்றில் தற்போது வர்த்தக நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டுள்ள விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

870/2025

கௌரவ லால் பிரேமநாத்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இந்த மன்றம் ஆரம்பிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாதென்பதையும்;

(iii) மேற்படி மன்றத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அந்நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் கீழுள்ள பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(vi) மேற்படி பயிற்சி நிலையங்கள் இன்றளவில் இயங்குநிலையில் காணப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்திற்குச் சொந்தமான நிறுவனங்களில் புதிதாக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்கட்டடங்களில் சில கட்டடங்களின் நிர்மாணப்பணிகள் இதுவரையில் நிறைவு பெறவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த கட்டடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

879/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்பு உறுதி (Deed of Grant) அல்லது காணி அனுமதிப்பத்திரம் (Land permit) வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்றுவரை அளிப்பு உறுதி (Deed of Grant) அல்லது காணி அனுமதிப்பத்திரம் (Land permit) வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

901/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் பிராந்திய அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் போதுமானளவு ஊழியர்கள் உள்ளனரா;

(iii) அவ்வலுவலகங்களுக்குத் தேவைப்படும் பொறியியலாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி எண்ணிக்கையிலான பொறியியலாளர்கள் உள்ளனரா;

(v) இன்றேல், பொறியியலாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(vi) புதிய பொறியியலாளர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்களா;

(vii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் மின்சாரம் உற்பத்திச் செய்யப்படும் மூலங்கள் யாவை;

(ii) இன்றளவில் மேற்படி ஒவ்வொரு மூலத்திலிருந்தும் உற்பத்திச் செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) இலங்கை மின்சார சபை தனியார்மயப்படுத்தப்படுமா;

(iv) ஆமெனில், அதன் ஊழியர்கள் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சபையின் கீழுள்ள கம்பெனிகளில் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூலோபாய நிகழ்ச்சித் திட்டங்கள் / கருத்திட்டங்கள் யாவை;

(ii) இன்றளவில் மேற்படி ஒவ்வொரு கம்பெனியிலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி கம்பெனிகளில் ஊழியர் மிகை காணப்படுகின்றதா;

(iv) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கம்பெனியிலும் காணப்படும் ஊழியர் மிகை வெவ்வேறாக யாது;

(v) இலங்கை மின்சாரக் கம்பெனியால் எப்பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது;

என்பதையும் அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

995/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதையும்;

(ii) அதற்கென விவசாயிகள் மிக அதிகமான உழைப்பினையும், பணத்தையும் ஈடுபடுத்த வேண்டியுள்ளது என்பதையும்;

(iii) ஆயினும், உழைப்பினையும், செலவினையும் ஈடுசெய்யக்கூடிய நியாயமான விலை விவசாய உற்பத்திகளுக்கு கிடைக்காமையின் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iv) விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்யும் போது, நுகர்வோரும் அதிக விலையை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது என்பதையும்;

(v) விவசாயிக்கும் நுகர்வோருக்கும் இடைநடுவே உள்ள மொத்த வியாபாரியும், சில்லறை வியாபாரியும் அதிக இலாபத்தை ஈட்டுகின்றனர் என்பதையும்;

(vi) விவசாயிகள் மற்றும் நுகர்வோர் ஆகிய இருதரப்பினரையும் பாதிக்கின்ற மேற்படி வழிமுறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், விவசாயி, வியாபாரி மற்றும் நுகர்வோர் ஆகிய மூவரையும் பாதுகாக்கும் வகையிலான வேலைத்திட்டமொன்று இதற்கென தயார் செய்யப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1047/2025

கௌரவ அஜித் கிஹான்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களனிய, வனவாசல கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் கடந்த பல வருடங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) புத்தளம் மாவட்டத்தின் அறுவக்காடு கழிவு நிரப்பல் கிடங்குக் கருத்திட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) குறித்த கருத்திட்டம் தோல்வியடைவதற்கு அரசியல் அழுத்தங்கள் காரணமாக அமைந்துள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் பணிகளை நிறைவுசெய்து, அதனை மீள ஆரம்பிப்பதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?